# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109494

1. District : திருச்சி மாவட்டம் / மாவட்டம் — PS: உண.தக. பிரிவு / காவல்நிலையம் — Year: 2023 / ஆண்டு — FIR No.: 02 / மு.த.அ. எண் — Date: 20/1/2023 / நாள்

2. (i) Act சட்டம்: உணவுப் தடுப்பு / சட்டம் 1988 (2018-ல் திருத்தப்பட்டது) — Sections பிரிவுகள்: 7(1a)

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : 18/1/2023 நாள் முதல் — Date to : 15.00hrs நாள் வரை

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20/1/2023 — Time : நேரம் 07.00hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20/1/2023 — Time : நேரம் 10.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமான/ புகார் மனு [Computerized]

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — 5 Km வடக்கு

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி -

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு. ஜெ. சந்தோஷ் ராஜ் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — ஜெயநாயகம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 21/6/89 — (d) Nationality : நாட்டினம் — இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் — தற்போது தொழில் நுட்ப துறை பணி — (g) Address : முகவரி — பாரதி நகர், K.K. நகர், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - அதிகம் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/ தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant — 20.11.23
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20/11/2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..................
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்.

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2023–ன் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.7, 12–ன் தொடர்ச்சி...**

| | |
|---|---|
| **எதிரி**<br><br>திரு.ஜெயசந்திரன்,<br>மின் கணக்கீட்டாளர்,<br>தென்னூர் மின்வாரிய அலுவலகம்,<br>தமிழ்நாடு மின்சார வாரியம்,<br>திருச்சி. | திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று (20.01.2023) காலை 09.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.P.ஆண்ட்ரூ சந்தோஷ் ராஜ், வயது 33/2023, த/பெ.பெரியநாயகம், நெ.4, தென்றல் நகர், SBIOA ஸ்கூல் ரோடு, கே.கே.நகர், திருச்சி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை |

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, தென்னூர், மின்வாரிய அலுவலகத்தில் மின் கணக்கீட்டாளராக பணிபுரியும் திரு.ஜெயசந்திரன் மற்றும் புகார்தாரர் திரு.ஆண்ட்ரூ சந்தோஷ் ராஜ் ஆகியோரின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை மேற்கொண்டு, இன்று 20.01.2023 காலை 10.15 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.02/2023 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு.அனுப்புதல், P.ஆண்ட்ரூ சந்தோஷ் ராஜ், த/பெ.பெரியநாயகம், நெ.4, தென்றல் நகர், SBIOA ஸ்கூல் ரோடு, கே.கே.நகர், திருச்சி–21. பெறுதல், உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், திருச்சி. மதிப்பிற்குரிய அய்யா, நான் MBA, M.Phil., படித்துவிட்டு ஹைதராபாத்தில் உள்ள CTS என்ற கம்பெனியில் Senior Processor ஆக வேலைசெய்து வருகிறேன். என்னுடைய அப்பா பெரியநாயகம் கடந்த 2013ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது அப்பா பெரியநாயகம் பெயரில் திருச்சி, உறையூர், சவேரியார் கோவில் தெருவில், எண்.6/12 என்ற வீடு உள்ளது. எனது அப்பாவின் வாரிசுகளாக எனது அம்மா ஸ்வரூபராணி, அக்கா வனிதா ஜானிஸ், அண்ணன் மதன் யோஷ்வா மற்றும் என்னைச் சேர்த்து நான்கு பேர் வாரிசுதாரர்கள். எனது அக்கா மற்றும் அண்ணனுக்கு திருமணம் ஆகி தனித்தனியே வசித்து வருகின்றனர். எனது அப்பா பெயரில் உள்ள வீட்டில் நானும் எனது

அம்மாவும் மட்டும் வசித்து வந்தோம். கடந்த 11.1.2021 அன்று எனது அம்மா, அக்கா மற்றும் அண்ணன் ஆகியோர் மேற்படி வீட்டினை பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் மூலம் எனக்கு கொடுத்துவிட்டனர். எனது வீடு தொடர்பான அனைத்து ஆவணங்களும் எனது அப்பா பெயரிலேயே இருந்து வந்தது. எனக்கு கடந்த 2016-ல் திருமணம் நடந்தது. எனது மாமனார் வீடு திருச்சி கே.கே.நகரில் இருப்பதால் நான், எனது குடும்பத்துடன் எனது மாமனார் வீட்டுக்கு அருகில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தமான மேற்படி உறையூரில் உள்ள வீட்டினை கடந்த அக்டோபர்-2022ல் டாக்டர்.கலைவாணன் என்பவருக்கு க்ளினிக் வைப்பதற்கு வாடகைக்கு விட தீர்மானித்தேன். அதனால் எனது வீட்டின் மின்இணைப்பு எண்.203-071-583 ஆனது Domestic connection ஆக இருப்பதால் அதனை Commercial connection-க்கு மாற்ற வேண்டியிருந்தது. இது சம்மந்தமாக தென்னூர் EB ஆபீசில் சென்று விசாரித்தபோது, எனது அப்பா பெயரில் உள்ள சொத்துவரியினை எனது பெயருக்கு மாற்றம் செய்து வந்தால்தான் Commercial connection-க்கு மாற்ற முடியும் என்று சொன்னார்கள். இது சம்மந்தமாக திருச்சி மாநகராட்சியில் எனது அப்பா பெயரில் இருந்த சொத்து வரியினை எனது பெயருக்கு மாற்ற வேண்டி கடந்த அக்டோபர் மாதத்தில் விண்ணப்பம் செய்து மாநகராட்சியிலிருந்து சொத்துவரி எனது பெயருக்கு கடந்த ஜனவரி 4-ம் தேதிதான் மாற்றம் ஆனது. இந்நிலையில் எனது வீட்டில் டாக்டர் கலைவாணன் Friends Clinic என்ற மருத்துவமனையை கடந்த நவம்பர்-2022 முதல் துவக்கிவிட்டார். சொத்துவரி எனது பெயருக்கு மாற்றம் ஆகாததால் எனது வீட்டிற்கான EB connection மாற்ற காலதாமதம் ஆகிவிட்டது. பின் 9.1.2023 அன்று EB Assessor ஜெயச்சந்திரன் என்பவர் என்னை எனது செல்போனில் அழைத்து EB ஆபீசுக்கு வருமாறு சொன்னதன்பேரில் நான் கடந்த 9.1.2023 அன்று மாலை சுமார் 4 மணியளவில் தென்னூர் EB ஆபீசுக்கு சென்று EB Assessor ஜெயச்சந்திரனை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம், என்னப்பா, நவம்பர் மாசமே உனது வீட்டினை க்ளினிக்குக்கு வாடகைக்கு விட்டிருக்க ஆன EB connection-ல் Tariff change பண்ணாம இருக்க, நான் பாத்தனால உன்ன கூப்பிட்டு பேசுறேன், இதே ஸ்குவார்டு வந்தா 80 ஆயிரம் வரை ஃபைன் போட்டிருப்பாங்க தெரியுமா என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், என் பெயருக்கு சொத்துவரி இப்பதான் சார் Change ஆயிருக்கு, அதனாலதான் நான் Tariff change பண்ண வர முடியல, இப்ப பண்ணிடுறேன் சார் என்று சொன்னேன். உடன் ஜெயச்சந்திரன் அவரிடமிருந்த அப்ளிகேசன்ல என்னிடம் மூன்று நான்கு கையெழுத்து வாங்கிக் கொண்டு, மீண்டும் என்னிடம் உனக்கு 80 ஆயிரம் வரை

ஃபைன் வாவேண்டியது, அது இல்லாம நான் பாத்துக்கிறேன், நீ பொங்கல் முடிஞ்சி என்ன வந்து பார் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன்பிறகு நான் பொங்கல் முடிந்து கடந்த 18.1.2023 அன்று சுமார் மாலை 3 மணியளவில் மீண்டும் தென்னூர் EB ஆபீக்கு சென்று Assessor ஜெயச்சந்திரனை சந்தித்தேன். அவர், உன் வீட்டை ஸ்குவார்டு வந்து பாத்து ஃபோட்டோ எடுத்திட்டாங்க, அதனால அவங்களயெல்லாம் அட்ஜெஸ்ட் பண்ண வேண்டியிருக்கு, உன்னோட வேல இப்ப முடியனும்னா 15 ஆயிரம் கொடுத்திடு, எந்த பிரச்சனையும் இல்லாம உனக்கு நான் Tariff change பண்ணி கொடுத்திடுறேன் என்று சொன்னார். அதற்கு நான், 10 நாளைக்கு முன்னாடிதான சார் வேலைக்கு சேர்ந்தேன். ரொம்ப அதிகமா கேக்குறீங்க, கஷ்டப்படுறேன், பாத்து கம்மிபண்ணி கேளுங்க சார் என்றேன். அதற்கு அவர், சரி மூவாயிரம் போக 12 ஆயிரம் கொடுத்திடு, அதுக்கு மேல என்னால ஒன்னும் பண்ண முடியாது என்றார். அதற்கு நான் அவரிடம், இந்த பணத்த உடனே என்னால ரெடி பண்ண முடியாது சார், நாளைக்கு விட்டுட்டு வெள்ளிக்கிழமை வந்து கொடுத்திடுறேன் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் வெள்ளிக் கிழமைக்கு பணத்தோட வந்திடுப்பா, அதுக்கு மேல delay பண்ணினா உனக்குதான் பிரச்சனை என்று சொன்னார். 20 ஆம் தேதி பணத்தோட உங்கள வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, என்னிடம் லஞ்சம் கேட்ட தென்னூர் EB ஆபீசில் பணிபுரியும் EB Assessor ஜெயச்சந்திரன்மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (P.ஆண்ட்ரூ சந்தோஷ் ராஜ்) 20.01.23. Submitted to the Court of the Hon,ble Special Judge, Special Court for Prevention of Corruption Act cases, Trichy. Received this report on 20/1/2023 at 09.00 hrs. Made preliminary enquiry and registered a case in Trichy V&AC Cr.No.02/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 10.15 hrs on 20/1/2023. Sd.xxx (A.PRASANNAVENKATESH) 20/1/2023 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Trichy.

20/1/2023

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption,
Tiruchirappalli.